STC.No. 1272/2022 Date:18.06.2025

Page No.

<u>பு.சா.1 சாந்தகுமார் த /பெ ஆறுமுகம் , வயது 48 .</u>

எதிரி ஆஜர்

**<u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

3. சாந்தினி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. நானும் சாந்தினி என்பவரும் சேர்ந்து கொண்டு சீட்டு கம்பெனி நடத்தி வந்தோம் என்றாலும் அதன்பேரில் நாங்கள் வட்டிக்கு கடன் கொடுத்தோம் என்றாலும் சரியல்ல. என் மூலமாக அறிமுகம் செய்யப்பட்ட சாந்தினி என்பவர் மூலமாக தான் எதிரிக்கு ரூ. 1 லட்சம் கடனாக பெற்று கொடுத்தேன் என்றால் சரியல்ல. சந்தினி என்பவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை முழுவதுமாக வங்கி கணக்கு மூலமாகவே எதிரி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அதற்கு உண்டான வங்கி கணக்கு ஆவணங்கள் அவர் வசம் உள்ளது என்றால் அதுபோல் எந்த நிகழ்வும் இல்லை. நான் Gpay மூலமாக எதிரி என் நண்பர் என்பதால் பணம் கொடுத்தேன். அதற்கு உண்டான ஆவணங்கள் என் வழக்கறிஞரிடம் ஏற்கனவே கொடுத்துள்ளேன். நான் ரூ.50000/-க்கு இரண்டு சீட்டுகள் நடத்தி வந்தேன் என்றாலும் அதன்காரணமாக தான் எதிரி என் வங்கி கணக்கிற்கு மாதம் தோறும் பணம் அனுப்பி வந்தார் என்றால் சரியல்ல.

4. சாந்தினி என்பவரிடம் ரூ 1 லட்சத்திற்கு மாதம் ரூ 6 வட்டியாக மாதமாதம் அவருக்கு ரூ 6000 ம் வட்டியாக செலுத்தி வந்துள்ளார் என்றால் சரியல்ல. சாந்தினி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. எனக்கு செலுத்தவேண்டிய சீட்டி தொகையும் சாந்தினிக்கு செலுத்த வேண்டிய ரூ 1 லட்சம் பணத்தையும் எதிரி கொடுத்துவிடடார் என்றால் சரியல்ல. நான் சீட்டு எதுவும் நடத்தியதில்லை. சாந்தினியிடம் பெற்ற பணத்திற்கு மேல் பொருப்பாக அவரிடம் கொடுக்கப்பட்ட காசோலையை தான்பயன்படுத்தி நான் இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல. சீட்டு பணத்தை முழுவதும் நான் எதிரிக்கு கொடுக்காமல் ஏமாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சீட்டு நடத்தியதில்லை. எனவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.